பக்கங்கள் ஆறு

Registered as a Newspaper

அன்பளிப்பு

# உதயன்

விலை ரூபா 6-00

File (3)

சுடர் 11 வள்ளுவர் ஆண்டு 2027 சித்திரை 01 சனிக்கிழமை (13-04-1996) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 138

# கொழும்பு துறைமுகத்துள் ஊடுருவி பெரும் வெடி குண்டுத் தாக்குதல்!

**இன்று விடுமுறை**

புதுவருடத்தை ஒட்டி இன்று உதயன் ஊழியர்களுக்கு விடுமுறை. அதனால் நாளை உதயன் வெளிவரமாட்டான். நாளை மறுதினம் முதல் வழமைபோல் உங்கள் கைகளில் அவன் தவழ்வான்.

## மூன்று வர்த்தகக் கப்பல்களும் கடற்படைப் படகுகளும் சேதம்

கொழும்பு: ஏப்ரல் 13

நேற்றுக் காலை ஸ்ரீலங்கா தலைநகர் கொழும்பில் உள்ள சர்வதேச துறைமுகத்துக்குள் ஊடுருவி, ஆயுதபாணிகள் நடத்திய பெரும் வெடிகுண்டுத் தாக்குதலினால் கொழும்பு அதிர்ந்தது; மூன்று வர்த்தகக் கப்பல்களும் சில கடற்படைப் படகுகளும் சேதமுற்றன.

நேற்றுக் காலை 5.45 மணியளவில் மிகக் கடுமையான பாதுகாப்பு வலயங்களையும் ஊடுருவி இரு படகுகளில் தாக்குதல் நபர்கள் வெடிகுண்டுகளுடன் நுழைந்து இத் துணிகரத் தாக்குதலை நடத்தியிருக்கின்றனர்.

துறைமுகத்தின் வடபுற வாயில் ஊடாக நுழைந்த இப் படகுகளில் இருந்து றொக்கட் லோஞ்சர்கள் மூலமும் துப்பாக்கிகள் மூலமும் நாலா புற

(6 ஆம் பக்கம் பார்க்க)

## 'காஸ்' ஏற்றி வந்த கப்பலே தாக்குதல் இலக்கு?

கொழும்புத் துறைமுகத்துக்குள் குண்டுத் தாக்குதல் நடந்த சமயம் 7 ஆயிரத்து 500 தொன் சமையல் வாயுவுடன் (''எல். பி. காஸ்'') கப்பல் ஒன்று தரித்து நின்றதாகக் கூறப்படுகின்றது. இக்கப்பல் மயிரிழையில் தப்பியதாகவும் கூறப்படுகின்றது.

தாக்குதல் நடத்தியோரின் இலக்கு இக்கப்பலாக இருக்கலாம் எனக் கருதப்படுகின்றது.

தாக்குதல் நடத்தியோர் றொக்கட் லோஞ்சர்கள் மூலம் நடத்திய தாக்குதலின்போது, ஏதேனும் ஒரு றொக்கட் இக்கப்பலில் பட்டு, அதில் இருந்த எரிவாயு தீப்பற்றத் தொடங்கியிருந்தால் அதனால் ஏற்படக்கூடிய அனர்த்தம் அளவிடமுடியாததாக இருந்திருக்கும் என்றும், கொழும்புத் துறைமுகத்தின் வர்த்தக எதிர்காலம் கேள்விக்குறியாக இருந்திருக்கும் என்றும் அவதானிகள் கருத்து வெளியிட்டனர்.

தாக்குதல் நடத்தியோர் தமது முயற்சியில் முழு வெற்றி பெற்றிருந்தால் கொழும்புத் துறைமுகமே தீப்பற்றி எரிந்திருக்கும் என அமைச்சர் அஷ்ரப் தெரிவித்தார்.

## புகைமண்டலம் எழுந்தது

கொழும்புத் துறைமுகத்துக்குள் நேற்றுக் காலை ஏற்பட்ட குண்டு வெடிப்பை அடுத்து, வானத்தில் கருமையாக எழுந்து திரளாகக் காணப்பட்ட புகை மண்டலத்தை ரூபவாஹினி நேற்றிரவு தனது செய்தி ஒளிபரப்பில் காட்டியது.

அடுத்தடுத்து இடம்பெற்ற குண்டு வெடிப்புகளின் பின்னர், கொழும்புத் துறைமுகத்துக்கு வெளியே இருந்தவாறு இந்தப் புகைமண்டலம் படமாக்கப் பட்டிருந்தது.

## 3 கிபிர் ஜெட் விமானங்கள் நேற்று அருந்தப்பு!

கொழும்புத் துறைமுகத்துக்குள் நேற்றுக் காலை குண்டுத் தாக்குதல் நடத்தப்படுவதற்கு சில மணி நேரத்திற்கு முன்னர்தான் அங்கு தரித்து நின்ற இஸ்ரேல் நாட்டுக் கப்பலில் இருந்து மூன்று 'கிபிர்' ரக ஜெட் விமானங்கள் இறக்கப்பட்டு, வெளியே எடுத்துச் செல்லப்பட்டதாக 'வெரித்தாஸ்' வானொலி அறிவித்தது.

இத்தாக்குதலை நடத்தியோர் இஸ்ரேல் நாட்டுக் கப்பலில் இருந்து ஆயுதங்கள் இறக்கப்படுவது பற்றிய தகவல் கிடைத்ததை அடுத்து தாக்குதலை நடத்தத் திட்டமிட்டிருக்கலாம் என கடற்படை அதிகாரிகள் சிலர் கருத்து வெளியிட்டனர்.

[உ-இ-3-6-7-8]

## பாதுகாப்பு வட்டாரங்கள் தாக்குதல் குறித்து அதிர்ச்சி

மிகப் பாதுகாப்பானது எனக் கருதப்படும் — வர்த்தக, கேந்திர முக்கியத்துவம் மிக்க — கொழும்புத் துறை முகத்துக்குள் வெடிப்பொருள்கள் மற்றும் ஆயுதங்களுடன் தாக்குதல் நபர்கள் எவ்வாறு நுழைந்தார்கள்? — இந்த விடயம் பாதுகாப்பு வட்டாரங்களில் பேரதிர்ச்சியை ஏற்படுத்தியிருப்பதாக செய்தி வட்டாரங்கள் தெரிவித்தன.

## வேலைக்கு வந்தோருக்கு ரூ. 500

நேற்றுக் காலை கொழும்புத் துறைமுகத்துக்குள் நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதலின் பின்னரும் நேற்று துறைமுகத்துக்கு வேலைக்கு சமுகம் தந்த துறைமுக ஊழியர்கள் ஒவ்வொருவருக்கும் அவர்களது கடமையுணர்வைப் பாராட்டி தலா ஐநூறு ரூபா சன்மானம் வழங்கப்படும் என அரசு அறிவித்திருக்கின்றது.

குண்டுத் தாக்குதலை அடுத்து பெரும்பாலான துறைமுக ஊழியர்கள் வேலைக்கு வரவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

## ஆர்.பி.ஜி. மூலம் திடீரென றொக்கட்டுக்களை ஏவினர்

தாக்குதல் நடத்த வந்தவர்களுக்கும் கடற்படைக் கப்பலில் இருந்த கடற்படையினருக்கும் இடையில் சிறிது நேரம் துப்பாக்கிச் சமர் நடந்ததாகவும், இச்சமரில் கடற்படைச் சிப்பாய் ஒருவர் காயமடைந்ததாவும் செய்தி ஏஜென்ஸி ஒன்று தெரிவித்தது.

தாக்குதல் நடத்தியோர் திடீரென ஆர். பி. ஜி. மூலம் நாலாபுறமும் றொக்கட்டுகளை ஏவினர் என்றும் மற்றொரு செய்தி தெரிவித்தது.

## கப்பல் போக்குவரத்தும் வர்த்தகமும் பாதிப்புறும்

நேற்றைய தாக்குதலை அடுத்து கொழும்புத் துறைமுகம் ஊடான சர்வதேச கப்பல் போக்குவரத்தும் வர்த்தகமும் கட்டாயம் பாதிக்கப்படும் என்று ''லொயிட்ஸ்'' சர்வதேச காப்புறுதி நிறுவனத்தின் ஸ்ரீலங்கா முகவர்களான ''ஏய்க்கின் ஸ்பென்ஸ்'' நிறுவனத்தின் அதிகாரிகள் தெரிவித்தனர்.

இத் தாக்குதல் கொழும்புத் துறைமுகத்தின் பாதுகாப்பை கேள்விக்குறியாக்கியிருப்பதால்—

கொழும்புத் துறைமுகம் ஊடான போக்குவரத்தை சர்வதேச கப்பல் நிறுவனங்கள் தவிர்க்கும்; கொழும்புத் துறைமுகத்தில் தரிக்கும் கப்பல்களுக்கான காப்புறுதிக் கட்டணமும் அதிகரிக்கப்படும் — என்று தெரிவிக்கப்பட்டது.

இப்பாதிப்பு ஸ்ரீலங்காவின் பொருளாதார ஸ்திரமற்ற நிலையை மோசமான நிலைக்குக் கொண்டு செல்லும் என்றும் சுட்டிக்காட்டப்பட்டது.

ஸ்ரீலங்காவின் வர்த்தகத் துறையில் இது தற்காலிக பாதிப்பை ஏற்படுத்தும் என்று அமைச்சர் அஷ்ரப் தெரிவித்தார்.

## முகத்துவாரத்திலிருந்து படகுகள் வந்திருக்கலாம்

### பிரதி பொலிஸ் மாஅதிபர் தெரிவிப்பு

முகத்துவாரம் மீன்பிடித்துறைமுகத்தில் இருந்தே தாக்குதல் படகுகள் புறப்பட்டு வந்து கொழும்பு துறைமுகத்துக்குள் ஊடுருவியிருக்கலாம் என்று விசாரணையில் தெரிய வந்துள்ளதாக பிரதிப் பொலீஸ் மா அதிபர் டி. எம். ஜி. திஸநாயக்கா நேற்று தெரிவித்தார்.

இந்தப் படகுகள் நெடுந்தொலைவில் இருந்து வந்திருக்க முடியாது என்றும், கொழும்பு துறைமுகத்துக்கு மிக அருகில் பாதுகாப்பான ஓர் இடத்தில் அவை தரித்திருந்திருக்க வேண்டும் என்றும் பாதுகாப்பு வட்டாரங்கள் கூறுவதாக பி. பி. ஸி. தெரிவித்தது.

தாக்குதல் நடத்தியோர் [illegible] களிலிருந்து பெருங்கடலுக்குச் சென்று மீண்டும் அங்கிருந்து கொழும்புக்கு வந்திருக்கலாம் என்று இராணுவ விமர்சகர் இக்பால் அத்தாஸ் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொழும்பில் பதற்றம்

நேற்றுக் காலை 5-45 மணி முதல் காலை 8-00 மணி வரை கொழும்புதுறைமுகத்துக்குள் கேட்ட பெரும் குண்டு வெடிப்புச் சத்தங்கள் மற்றும் வேட்டுக்களின் முழக்கம் ஆகியவற்றினால் கொழும்பில் சில மணி நேரத்துக்கு பெரும் பதற்றம் நிலவியது.

அதிகாலையில் வெடிகுண்டுச் சத்தம் பல கிலோ மீற்றர் தூரம் வரை கொழும்பு நகரையே உலுப்பும் வகையில் கேட்டது.

குண்டுகள் கடற்பகுதியில் வெடித்ததால் பலத்த ஓசை கொழும்பு எங்கும் கேட்டதாக கப்பல் போக்குவரத்து, துறைமுகங்கள் அமைச்சர் அஷ்ரப் தெரிவித்தார். இச்சத்தங்களை அடுத்து துறைமுகத்துக்குள் இடம்பெற்ற தாக்குதலில் பலர் உயிரிழந்ததாக செய்திகள் வெளியாகின என்றும் அவற்றில் உண்மை இருக்கவில்லை என்றும் அஷ்ரப் மேலும் சொன்னார்

## மூவரின் சடலங்களை படைகள் கைப்பற்றினவாம்

கொழும்புத் துறைமுத்தில் நேற்று படையினர் நடத்திய பதில் தாக்குதலை அடுத்து உயிரிழந்த—தாக்குதல் நபர்களில் — மூவரின் சடலங்கள் பின்னர் படையினரால் கைப்பற்றப்பட்டதாக செய்தி ஏஜென்ஸீ ஒன்று தெரிவித்தது.

தாக்குதல் நபர்கள் வந்த படகின் ஒரு பகுதி, கடற்படையினரால் அப்படகு தகர்க்கப்பட்ட பின்னர் மீட்கப்பட்ட தாகவும்—

அதில் தமிழில் ''கண்ணன்'' என்ற பெயர் பொறிக்கப்பட்டிருந்ததாகவும் ''ரூபவாஹினி'' தெரிவித்தது.

## மாஹோவும் சிறிது சேதம்

நேற்று கொழும்புத் துறைமுகத்தில் நடத்தப்பட்ட தாக்குதலின்போது — அச்சமயம் வடபகுதிக்குச் செல்வதற்காக அங்கு தரித்து நின்று, பொருள்களை ஏற்றிக் கொண்டிருந்த— மாஹோ கப்பலும் சிறிது சேதமுற்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

வடபகுதிக்கான மண்எண்ணெய் பரல்களை ஏற்றி வருவதற்காக இக்கப்பல் கொழும்புத் துறைமுகத்தில் தரித்து நிற்கின்றது. இக்கப்பலில் பெரும் சேதம் ஏதும் ஏற்படவில்லையாதலால் அது தனது வழமையான சேவையைத் தொடரும் என எதிர்பார்க்கப்பட்டது.

## கப்பல் ஒன்றுக்குள் இருந்த ஏழு வாகனங்கள் சேதம்

நேற்று நடைபெற்ற தாக்குதலின் போது கொழும்புத் துறைமுகத்தில் தரித்து நின்ற கப்பல் ஒன்றுக்குள் இருந்த ஏழு வாகனங்களும் சேதமுற்றதாக அறிவிக்கப்பட்டது.

## தாண்டிக்குளம் ஊடாக வடக்கே வரத் தடை!

### 4 ஆயிரம் பயணிகள் சிக்குண்டனர்

கொழும்பு, ஏப். 13

கொழும்புத் துறைமுக தாக்குதலை தொடர்ந்து வவுனியா தாண்டிக்குளம் ஊடாக வடக்கே தமிழர் செல்வது தற்காலிகமாக தடைசெய்யப்பட்டுள்ளதாக இராணுவத்தினர் தெரிவித்தனர்.

புத்தாண்டுக் கொண்டாட்டங்களுக்காக வடக்கே வருவதற்காக நேற்று வவுனியா வந்த சுமார் 4 ஆயிரம் பேர் வவுனியா வேப்பங்குளம் முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது

இவ்வளவு எண்ணிக்கையானோரை சோதனை செய்வது இலகுவான காரியமல்ல என படையினர் தெரிவித்துள்ளதால் புத்தாண்டு நாளான இன்று அவர்கள் வடக்கே செல்வது சந்தேகமே என பி. பி. ஸி. குறிப்பிட்டது. (உ-3)

**அனைவருக்கும் உதயனின் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்**

# தற்காலிக முகவரி பதிய காலஅவகாசம் நீடிப்பு

சாவகச்சேரி ஏப். 13

குடும்பப் பதிவு அட்டையில் தற்காலிக முகவரியைப் பதிவு செய்வதற்கு வழங்கப்பட்டிருந்த கால அவகாசம் மேலும் நீடிக்கப்பட்டுள்ளது.

இம் மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் தற்காலிக முகவரியைப் பதிவு செய்யுமாறு யாழ். மாவட்டத்தில் இருந்து இராணுவ நடவடிக்கை காரணமாக இடம் பெயர்ந்து வன்னி, முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்களில் தங்கி உள்ளோர் கோரப்பட்டிருந்தனர்.

தற்போது இதற்கான அவகாசம் மேலும் ஒரு மாதத்துக்கு—அதாவது மே 15 ஆம் திகதி வரை — நீடிக்கப்பட்டிருப்பதாக குடும்ப அட்டைப் பகுதி மையச் செயலகம் அறிவித்துள்ளது.

இடம்பெயர்ந்தோர், தற்போது வசிக்கும் தற்காலிக முகவரியினை அந்தந்த பகுதி கிராம அலுவலரின் உறுதிப்படுத்தலுடன் அந்தந்த பகுதிக்கென இருக்கும் குடும்பப் பதிவு அட்டை செயலகங்களின் ஊடாக பதிவு செய்து கொள்ளுமாறு கோரப்பட்டிருக்கிறது.

இக் காலப்பகுதிக்குள் தற்காலிக முகவரியினை பதிவு செய்து கொள்ளாதவர்களின் குடும்பப் பதிவு அட்டைகள் பாவனைக்கு ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அரச வன்முறைகள் குறித்து பாரபட்சமற்ற விசாரணை தேவை

கொழும்பு, ஏப். 13

அரச வன்முறைச் சம்பவங்கள் குறித்து பாரபட்சமற்ற விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசில் அங்கம் வகிக்கும் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி மேற்கண்டவாறு அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

தற்போது நடந்துள்ள சில அரசியல் வன்முறைச் சம்பவங்களினால் மக்களது அடிப்படை ஜனநாயக உரிமைகளுக்கு, பாதிப்பு ஏற்பட்டுள்ளதுடன் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் கீர்த்திக்கும், நற்பெயருக்கும் ஊறு ஏற்படுகிறது.

எனவே தற்போது தெரிவிக்கப்படும் அரசியல் வன்முறைக் குற்றச்சாட்டுக்கள் குறித்து பாரபட்சமற்ற, காத்திரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

இத்தகைய முக்கிய பிரச்சினைகளை கலந்தாலோசிக்க பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் மத்திய நிர்வாகக் குழுவைக் கூட்டவேண்டும்— இப்படி கம்யூனிஸ்ட் கட்சி மேலும் கோரியுள்ளது. (இ-3)

## ஷெல் தாக்குதல் தொடர்கிறது

கரணவாய், ஏப்.13

பலாலி இராணுவ முகாமிலிருந்து நேற்றுக் காலையும் நேற்று முன்தினம் இரவும் வடமராட்சி, தொண்டமானாறு பகுதிகளை நோக்கி ஷெல் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. [இ-15-80]

## அவசர கலந்துரையாடல்

சாவகச்சேரி, ஏப், 13

கையொப்பம் சேகரிக்கும் போராட்டம் தொடர்பான கலந்துரையாடல் நிகழ்வொன்று நாளை ஞாயிற்றுக் கிழமை காலை **9.30** மணிக்கு சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இதில் சாவகச்சேரி வலய மேலதிக அரசாங்க அதிபர் பிரிவுக்கு உட்பட்ட சகல நிரந்தர கிராம சேவை உத்தியோகத்தர்கள், இடம் பெயர்ந்து அப்பிரிவில் கடமையாற்றும் கிராம சேவை உத்தியோகத்தர்கள், அப்பிரிவிக்குட்பட்ட சகல ஊர்காப்புக் கழகங்களின் பிரதிநிதிகள், கிராமிய உற்பத்திக் குழுக்களின் தலைவர், செயலாளர்கள் ஆகியோரை தவறாது கலந்து கொள்ளும்படி சாவகச்சேரி வலய வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம் கோரியுள்ளது. [இ]

## கிளிநொச்சியில் உணவு முத்திரை

கிளிநொச்சி, ஏப். 13

வறுமை நிவாரணம் பெறுபவர்களுக்கான வறுமை நிவாரன உணவு முத்திரைகள் கிளிநொச்சி மாவட்ட செயலகத்துக்கு வந்து சேர்ந்துள்ளன என்று இம் மாவட்ட அரசாங்க அதிபர் திரு. எஸ். தில்லைநடராஜா தெரிவித்தார்.

ஒரு வருடத்துக்கான இந்த வறுமை நிவாரண உணவு முத்திரைகள் உதவி அரசாங்க அதிபர்கள் ஊடாக அந்தந்தப் பிரிவு கிராம உத்தியோகத்தர்கள் மூலம் உரியவர்களுக்கு வழங்கப்படும். (இ-124)

## OBITUARY

### MANO SPENCER

Mano Spencer (Retd. D. D. O., Milk Board and Business Officer, Green Hospital, Manipay) son of Late Mr. W. J. and Mrs. Dora Spencer, beloved husband of Ranjini, loving father of Dharman (Colombo) and Dilo (Teacher, Udvil Girls' College), Son - in - Law of Late Mr & Mrs Winslow Sugvitharatnam expired on 07 - 04 - 96. Burial took place on 10 - 04 - 96 at Jawatte Cemetery.

Informant
S. C. Vasanthakumar,
(Brother - in - Law)
Bank of Ceylon,
Chavakachcheri.

No B 3/1, Anderson Flats,
Park Road,
Narahenpita.

(41377)

## கண்ணீர் அஞ்சலி

### செல்வி உஷாநந்தினி வேலாயுதம்

அவர்கள் **04 - 04 - 1996** அன்று காலமானதையிட்டு அவருக்கு எமது கண்ணீர் அஞ்சலியை சமர்ப்பிக்கின்றோம்.

யா/ இந்து மகளிர் கல்லூரி
95 (O/L) நண்பிகள்

(41526)

## மரண அறிவித்தல்கள்

### சுப்பிரமணியம் மீனாட்சி

காரைநகர் கோவளத்தை பிறப்பிடமாகவும், தற்போது புதிய சந்தை வீதி, கிளிநொச்சியை வதிவிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் மீனாட்சி 12 – 04 – 96 இல் கிளிநொச்சியில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற நாவலப்பிட்டி வர்த்தகர் சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும், தவரத்தினம் (வாணி றெக்ஸ்), தவராசா, இரத்தினராசா, தவமணி, சிவமணி ஆகியோரின் அன்புத் தாயாரும், பரஞ்சோதி, சுந்தரராஜா, சரஸ்வதி, சிவபாக்கியம், சந்திராதேவி ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 12-4-96 இல் கிளிநொச்சியில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கண்ணன்.

புதிய சந்தை வீதி,
கிளிநொச்சி.

(41378)

திருமதி

### தருமலிங்கம் பொன்னம்மா

தனங்கிளப்பைப் பிறப்பிடமாகவும், நீர்வேலி தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட தருமலிங்கம் பொன்னம்மா 11 – 4 – 96 அன்று காலமானார்.

இவர் காலஞ்சென்ற தருமலிங்கத்தின் அன்பு மனைவியும், தருமசேகரம் (ஓய்வுபெற்ற எழுதுவினைஞர், கனடா), காலஞ்சென்ற சௌந்தரராணி ஆகியோரின் அன்புத் தாயாரும், இராசரட்ணம் (ஓடிற்றர், கொழும்பு), ஜெயராணி ஆகியோரின் அன்பு மாமியாரும், சசிகலா (லண்டன்), சிறிதயாபரி (லண்டன்), சிறிசுதன் (பொறியியலாளர், லண்டன்), தமயந்தி (கனடா), தாரணி (கனடா), துஸ்யந்தன் (கனடா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியாருமாவார்

அன்னாரின் ஈமக்கிரியைகள் 12 - 4 - 96 வெள்ளியன்று கைதடியில் நடைபெற்றன.

தகவல்:
திருமதி கனகம்மா கதிரவேலு

தற்போதைய முகவரி:
மணியம் (சிவாஜி),
கைதடி மத்தி,
கைதடி.

(41521)

### பொன்னம்பலம் சங்கரப்பிள்ளை

(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

கரைநகர் களபூமியைப் பிறப்பிடமாகவும், தற்போது மதவாச்சியை வசிப்பிடமாகக் கொண்டவருமாகிய பொன்னம்பலம் சங்கரப்பிள்ளை (ஓய்வுபெற்ற ஆசிரியர் — தியாகராசா ம. ம. வித்தியாலயம், கரைநகர்) 10–04–96 இல் கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னம்பலம் — சின்னக்குட்டி தம்பதிகளின் அன்பு மகனும், நாகம்மாவின் (டாக்டர், அரசினர் வைத்திய சாலை, மதவாச்சி) அன்புத் கணவரும், காலஞ்சென்ற கந்தையா — சுந்தரம் தம்பதிகளின் மருமகனும், பிரபாவதி, சிவரூபினி, கிருபாலினி, திருச்செல்வி, பிரகலா ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 11-04-96 இல் கொழும்பில் நடைபெற்றன.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
K. R. கந்தசாமி
(மைத்துனர்)

இல. 100, ஜெயந்திநகர்,
கிளிநொச்சி.

(40498)

வாடிக்கையாளர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது புத்தாண்டு வாழ்த்துக்கள்

அசல் 22 கரட் தங்க நகைகளுக்கு
நீங்கள் நாடவேண்டிய இடம்

யாழ். ரூபி நகைப் பூங்கா

நவீன சந்தை மேல்மாடி,
சாவகச்சேரி.

(41383)

## சாந்திகம்

### ஆண்டுப் பொதுக் கூட்டம்

சாந்திகம் உளவளத்துணைச் சங்கத்தின் ஆண்டுப் பொதுக் கூட்டம் **28 - 04 - 96** அன்று **10** மணிக்கு சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரியின் பணிமனையில் நடைபெறும். அன்று புதிய நிர்வாக சபை உறுப்பினர் தெரிவு இடம்பெறும். சகல அங்கத்தவர்களும் சமுகம் அளிப்பதுடன் ரூ. 100 இனைச் செலுத்தி அங்கத்துவத்தை புதுப்பித்துக் கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

Dr. இ. சிவஷங்கர்,
இடைக்காலத் தலைவர்

(41375)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

மலர்வு: **12 - 04 - 1943**

உதிர்வு: **16 - 03 - 1996**

### சங்கரப்பிள்ளை இராஜலிங்கம்

எம்மை ஆறாத்துயரில் மூழ்க வைத்து மீளாத் துயில் கொண்ட எமது அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகிறோம்.

நாளை **14 — 04 — 96** இல் நடைபெறவிருக்கும் அந்தியேட்டிக் கிரியைகளிலும், **15—04—96** இல் நடைபெறவிருக்கும் வீட்டுக் கிரியைகளிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் கேட்டுக் கொள்கிறோம்.

உங்கள் பிரிவால் துயருறும்
மனைவி, மக்கள், மருமகன்,
பேரப்பிள்ளைகள், சகோதரன்,
மைத்துனர்கள், மைத்துனிகள்.

வீரமாகாளி கோவிலடி,
[illegible]

(41525)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்கள்

திருமதி

### அன்னலட்சுமி யோகேஸ்வரன்

(நயினாதீவு)

07 – 04 - 1996 ஆம் திகதி காலமாகிய திருமதி அன்னலட்சுமி யோகேஸ்வரன் அவர்களின் பூதவுடல் 14-04-96 (ஞாயிறு) காலை 10-00 மணிக்கு கண்ணாடிப்பிட்டி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தயவுடன் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
செல்வி யோ. யோகரூபி (மகள்)
(மாணவி, பட்டப்படிப்புகள் கல்லூரி)
நயினை நா. வை. விசுவலிங்கம்
(A. O., கல்வி இலாகா–மைத்துனர்)

தற்போதைய முகவரி:-
5 ஆவது ஒழுங்கை,
(விகோரியா சேச் ஒழுங்கைக்கு முன்பாக),
கச்சாய் றோட், சாவகச்சேரி.

(41374]

### மயில்வாகனம் சிற்றம்பலம்

[ஓய்வு பெற்ற ஓவசியர்]

மாவிட்டபுரம் தெற்கை பிறப்பிடமாகவும், தற்போது மட்டுவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட மயில்வாகனம் சிற்றம்பலம் அவர்கள் 12-04-96 இல் காலமானார்.

அன்னார் சகுந்தலா தேவியின் அன்புக் கணவரும், விக்னராஜா (கனடா), செல்வி ஜெயவதனி (கனடா), செல்வி சிவயோகவதனி (ஆசிரியை, மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை), திருமதி சத்தியபவான் றஜனி, திருமதி சுபாகரன் றஞ்சினி (கனடா), செல்வி சறோஜினி ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 12-04-96 அன்று மட்டுவிலில் நடைபெற்றன என்பதை அறியத்தருகிறோம்.

தகவல்;
சிவயோகவதனி
(மகள்)

மே/பா. சி. இராசரத்தினம்,
வீரபத்திரர் கோவிலடி,
மட்டுவில் கிழக்கு.

(41524)

### சின்னத்தம்பி முருகேசு

வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும், கொக்குவில் மேற்கு, கேணியடி ஒழுங்கையை வசிப்பிடமாகவும் கொண்டிருந்தவரும் தற்பொழுது மீசாலை சோலை அம்மன் கோயிலடிக்கு அருகாமையில் வசித்தவருமான சின்னத்தம்பி முருகேசு 12 – 04 - 96 இல் காலமாகிவிட்டார்.

இவர் முருகேசு நாகரத்தினத்தின் அன்புக் கணவரும் புஷ்பராணி (ஜேர்மனி), ராஜினி (மருத்துவ சேவைத் தாதி, யாழ். போதனா வைத்தியசாலை), ரகுநாதன் (ஜேர்மனி), சிவநாதன் ஆகியோரின் அன்புத் தந்தையும், த. பாலசிங்கம், போ. தவராசலிங்கம் ஆகியோரின் அன்பு மாமனாரும், விஜி, ராஜி, சுகந்தி, சுரேஷ், நந்தினி, ஜேந்தன், அரவிந்தன், சஞ்சயன், துவாரகா, இந்துஜன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் தகனக் கிரியைக்காக இன்று (13-04-96) பகல் 11 மணிக்கு வேம்பிராய் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி ராஜினி தவராசலிங்கம்
(மகள்)

(41527)

மானிப்பாய்

# மருதடி விநாயகர் தேர்த்திருவிழா

**இன்று 13–4–1996 புத்தாண்டு பிறக்கிறது**

மானிப்பாய் மருதடி விநாயகர் ரதோற்சவ தினம் இன்றாகும், இன்றைய புத்தாண்டு தினத்திலே எல்லாம் வல்ல விநாயகப்பெருமான் சகல ஆன்ம கோடிகளுக்கும் அருள் பாலிப்பாராக.

மானிப்பாய் மருதடி விநாயகர்
ஆலய தர்மகர்தா சபை,
வழிபடுவோர் சங்கம்,
அடியார்கள்.

(41373)



வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எமது இதயம் கனிந்த புத்தாண்டு

★ வாழ்த்துக்கள் ★

# றெனி மூக்குக் கண்ணாடி அகம்

உங்கள் கண்களை சரியாக பரிசோதித்துக் கண்ணாடிகளை உடன் பெற்றுக் கொள்ள நீங்கள் நாட வேண்டிய ஒரே இடம்:

**றெனி மூக்குக் கண்ணாடி அகம்**

(யோகா மருந்தகத்துக்கு உள்ளே),
கண்டி வீதி, சாவகச்சேரி.

(உதயன் கிளைப் பணிமனை மேல்மாடியில்)
பிரதான வீதி,
பருத்தித்துறை.

(40436)



இதயங் கனிந்த

# புதுவருட வாழ்த்துக்கள்

★ பாண் ★ பட்டர் பாண்
★ பணிஸ் ★ றோல் பணிஸ்
★ சங்கிலி பணிஸ் ★ கறிபணிஸ்
★ ஜாம் பணிஸ் ★ கல்பணிஸ்

மற்றும் சகல விதமான கேக் வகைகள், பிஸ்கட் வகைகள்.

மேலும் ஐஸிங் கேக் வகைகளை அழகாகவும் தரமாகவும் சுவைமிக்கதாகவும் ஓடர்களை குறித்த தவணையில் செய்து பெற்றுக்கொள்ள தரம்மிக்க ஒரே இடம்.

# தீன்சுவை வெதுப்பகம்

103, பிரதான வீதி — பருத்தித்துறை.

(40435)


## செயலாளராக டிவகலாலா

திருகோணமலை, ஏப். 13

வடக்கு - கிழக்கு மாகாண கல்வி, கலாசார, விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளராக திரு சுந்தரம் டிவகலாலா நியமிக்கப்பட்டுள்ளார்.

வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநர் காமினி பொன்சேகா இந்நியமனத்தை வழங்கியுள்ளார்.

மாகாண கூட்டுறவு ஆணையாளராக பணிபுரிந்த இவர் வடக்கு - கிழக்கு மாகாண விளையாட்டுத்துறை பணிப்பாளராகவும் தொடர்ந்து பணி புரிவார். (இ-3)

## ஏ. ஆர். விக்கு கிளிநொச்சியில் தட்டுப்பாடு

கிளிநொச்சி, ஏப். 13

ஏற்பு நோய்க்கான தடுப்பூசி மருந்து மற்றும் விசர் நாய் கடிக்கான'' ஏ. ஆர். வி' நோய்த் தடுப்பூசி மருந்து ஆகியவற்றுக்கு கிளிநொச்சி வைத்தியசாலையில் தொடர்ந்து தட்டுப்பாடு நிலவிவருவதாகத் தெரியவருகிறது.

விசர்நாய் கடிக்கான தடுப்பூசி மருந்து பெறுவதற்கு வவுனியா வைத்தியசாலைக்கு செல்லவேண்டிய நிலை இப்பகுதி மக்களுக்கு ஏற்பட்டுள்ளது. (இ-124)

## பாராட்டு விழா

பிரதி மாகாண சுகாதாரப் பணிப்பாளராக நியமனம் பெற்றுள்ள லயன் டாக்டர் க. தா. சிவபாதத்துக்கு பாராட்டு விழா ஒன்று சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் இந்த பாராட்டு விழா நடைபெறும். (இ-3)


# SPOKEN ENGLISH WITH GRAMMAR

LECTURES BY:

**MR. M. A. HARI**
(B. A. Dip-in-Eng.)

3 ஆவது புதிய பிரிவு
ஆரம்பம் 14 - 04 - 1996
2-30 p.m.

SAT ] 2-30 p. m.
SUN ] — 3-30 p.m.

★ அனுமதிகள் வரையறுக்கப்பட்டுள்ளன. அனுமதிகளை முன் கூட்டியே பெறவும்.

HARY'S INSTITUTE
MEESALAI

(புத்தூர் சந்தி அருகாமையில்)

(41519) DIRECTOR



அருள்மிகு

# ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்

சாவகச்சேரி

இன்று பிறக்க இருக்கும் ''தாத்ரு'' புது வருஷத்தில் அனைத்து மக்களுக்கும் சாந்தியும் சமாதானமும் கிடைக்கவும், இடம்பெயர்ந்த மக்கள் தமது சொந்த இடங்களுக்குச் செல்லவும், அன்னை துர்க்காதேவியைப் பிரார்த்திப்பதோடு அனைத்து மக்களுக்கும் எனது புத்தாண்டு வாழ்த்துக்களையும் ஆசிகளையும் தெரிவிக்கின்றேன்.

நன்றி

இங்ஙனம்
ப மஹாகணபதி சர்மா
தர்மகர்த்தா

(41381)



# யூப்பிட்டர் கல்வி நிலையம்

சாவகச்சேரி.

**வணிகப்புள்ளி விவரவியல் A/L 97**

ஆசிரியர் திரு. குணம்

ஆரம்பம்: 14 – 4 – 96
பிரிவு I 3.00 மணி
இதற்கான அனுமதி: 2 — 3 மணி வரை
பிரிவு II 5.00 மணி
இதற்கான அனுமதி: 4 — 5 மணி வரை

குறிப்பு: மாணவர்களின் நலன் கருதி நேர அட்டவணை முதல் வகுப்பில் தீர்மானிக்கப்படும்.

(41380) — நிர்வாகி



# பாராட்டு விழா

அரிமா கழக பிராந்தியத் தலைவர்
லயன் டாக்டர்
க. தா. சிவபாதம் அவர்கள்
பிரதி மாகாண சுகாதாரப் பணிப்பாளராக நியமனம் பெற்றமையை இட்டு வாழ்த்துகின்றோம்.

**S. M. பெர்னாண்டோ**

கண்ணாடி வழங்குபவர்கள்
இல. 4, நவீன சந்தை, மேல்மாடி
சாவகச்சேரி.

(41379)



# பொதுக் கூட்டம்

காலம்: 15–04–1996 திங்கள்
நேரம்: காலை 10 00 மணி
இடம்: சதாபொன்ஸ் - மாலுசந்தி

தனியார் கல்வி நிறுவன இயக்குனர்கள், நிர்வாகிகள், பிரத்தியேக வகுப்பு ஆசிரியர்கள், ஆசிரியர்கள் அனைவரும் சமுகம் தரும்படி வேண்டப்படுகின்றனர்.

குறிப்பு: நிர்வாக சபை புனரமைப்பு நடைபெறும்.

**தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்**

வடமராட்சி.

(40438)



# இன்பத் திருநாள்

மலரும் தாது புத்தாண்டுடன் எமது தமிழீழ மக்களுக்கு சுபீட்ச வாழ்வு கிடைக்க வாழ்த்துகின்றோம்

எமது வடிக்கையாளர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவிப்பதுடன் தொடர்ந்தும் தங்கள் ஆதரவை வேண்டுகின்றோம்.

தரமான

**சன் பிராண்ட் (SUN BRAND)**

ரொபி, இனிப்பு வகைகள் தயாரித்து விநியோகிப்போர்

இப்போது இயங்கும் முகவரி:-
அளவை இனிப்புத் தொழிலகம் (SUN BRAND)
வீரபாகு கட்டடம், பருத்தித்துறை,

முன்பு இயங்கிய முகவரி:-
பண்டத்தரிப்பு சாலை,
அளவெட்டி.

[illegible] சாலை,
கொக்குவில் (40434)



# யாழ். பல்கலைக்கழகம்
## கலைப்பீட பரீட்சைகள்

ஏப்ரல் 22 ஆம் திகதி ஆரம்பமாகவிருந்த கலைப்பீடத்தின் பரீட்சைகள் அனைத்தும் பிற்போடப்பட்டு, **06 - 05 - 96** ஆம் திகதியிலிருந்து ஆரம்பமாகும். இப்பரீட்சைகள் சாவகச்சேரி, கிளிநொச்சி, வவுனியா ஆகிய இடங்களில் நடைபெறும். இப்பரீட்சைகளுக்குரிய நேர அட்டவணைகளையும், அனுமதி அட்டைகளையும் பரீட்சார்த்திகள் சாவகச்சேரியில் அமைந்துள்ள பல்கலைக்கழக அலுவலகம், கிளிநொச்சி விவசாயபீடம், வவுனியா பல்கலைக்கழகக் கல்லூரி ஆகியவற்றில் **01 - 05 - 96** இல் இருந்து பெற்றுக்கொள்ளலாம். முன்னைய வேண்டுகோளின்படி பரீட்சைக்கு விண்ணப்பிக்காதவர்கள் சாவகச்சேரி அலுவலகத்திற்கோ, கிளிநொச்சி அலுவலகத்திற்கோ விண்ணப்பித்துக் கொள்ளலாம்.

பதிவாளர்.

(C/4193)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள 12 இஞ்சி பிறிமியர் இந்தியன் கிறைண்டர் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: நாதன் மெடிக்கல் ஸ்ரோர்ஸ், நெல்லியடி. (40430)

### புத்தாண்டுப் பலன்கள்

1996 — 97 தாது வருஷ கர்ம பலன்கள், கைவிசேஷம், புதிய சனி மாற்ற பலாபலன்கள் (சத்யா), பாடசாலைக் கொப்பிகள், தினசரிகளும் விற்பனையாகின்றன. மணியம் ஸ்ரோர்ஸ், கண்டி வீதி, சாவகச்சேரி. (41514)

### மணப்பெண் தேவை

வயது 46, சவூதியிலிருந்து வந்துள்ள களஸ்திர தோஷ ஜாதகமுள்ள பிரமச்சாரிக்கு குற்றம், குறைபாடுள்ள அல்லது மறுமணத்துக்குரிய மணப்பெண் தேவை. ஜாதகத்துடன் விண்ணப்பிக்கவும். பொருந்தினால் மட்டும் மணமகன் தொடர்பு கொள்வார். 17-4-96க்கு முன்னர் விண்ணப்பிக்கவும். இல: 544 C/o உதயன், சரசாலை. (41515)

### பிரத்தியேக வகுப்பு

அனுபவம் பெற்ற ஆசிரியரினால் பௌதிகவியல், தூய கணிதம் பிரயோககணிதம் மிகச்சிறப்பாக, ஏராளமான பயிற்சிகளோடு கற்பிக்கப்படும். (தனிப்பட்ட முறையிலும்) R. பாலசுப்பிரமணியம் B. Sc. (Cey), Dip-in-Ed, நீல இல்லம், கன்பொல்லை வீதி, கரவெட்டி மேற்கு. (41370)

### வாடகைக்கு

பொருள்கள் வாடகைக்கு கொடுக்குமிடம். பீங்கான், ரம்லர், தண்ணீர் ரம்லர், ஐஸ்கிறீம் கப்ஸ். பிளாஸ்ரிக் பாய்கள், சில்வர் றே, கறி வாளிகள், கறி டிஸ்கள், பந்திப்பாய், கிடாரங்கள், சமையல் பாத்திரங்கள், தண்ணீர் பரல் இன்னும் பல. வெள்ளை மாளிகை, பெரிய அரசடி, சங்கத்தானை. (41147)

### மணமகள் தேவை

உயர் இந்து குலத்தைச் சேர்ந்த 45 வயதுடைய இளைப்பாறிய அரசாங்க எழுதுவினைஞருக்கு மணமகள் தேவை. செவ்வாய் தோசம் இல்லை. பூசம் நட்சத்திரம். முதற் கடிதத்தில் முழு விவரமும் தெரிவித்தால் நன்று. முகவரி: கா. ஹரிசுந்தரா, மே/பா S. பத்மகாந்தன் (ஆசிரியர்), வள்ளி அரேமியம், கச்சாய் வீதி, கொடிகாமம். [41368]

## றோணியோ வேலைகள்

றோணியோ வேலைகள், புத்தகம், கொப்பி கட்டுதல் ஆகியன செய்து கொடுக்கப்படும்.

**முத்துமாரி பதிப்பகம்**
வேரற்கேணி,
மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.
(41503)

---

இதயங் கனிந்த
புதுவருட நல்வாழ்த்துக்கள்!

## அஜந்தாஸ் ஸ்ருடியோ

உங்கள் உடன் தேவைக்கு படம் பிடிக்க

★ தேசிய அடையாள அட்டை
★ பாடசாலைக்கான அறிமுக அட்டை
★ இதர கறுப்பு, வெள்ளை படங்களும், கலர் படங்களும் துரித கெதியில் எடுத்து கொடுக்கப்படுகின்றன.

பாஸ் வழங்கும் செயலகத்திற்கு அருகாமை
வதிரி, நெல்லியடி.
(40427)

---

வாடிக்கையாளர்கள் சகலருக்கும்
எமது இதயங்கனிந்த புத்தாண்டு வாழ்த்துக்கள்!

காலத்துக்கு ஏற்ற வகையில் நவநாகரீக தங்க நகைகள் நவீன டிசைன்களில் குறித்த தவணையில் செய்து பெற்றுக்கொள்ள

## "மைதிலி நகை மாடம்"

**யாழ்ப்பாணத்தில்:**
190 A, கஸ்தூரியர் வீதி, யாழ்ப்பாணம்.
**வன்னியில்:**
இல: 6, புதிய சந்தை வீதி, கிளிநொச்சி
(சி-4191)

---

## தமிழ் இனத்தின்துன்பதுயரங்களை வெளியுலகிற்கு தெரியப்படுத்தல்

சிறிலங்கா இராணுவ நடவடிக்கையினால் தமிழ் மக்களுக்கு ஏற்பட்டுள்ள நெஞ்சை உருக்கும் சம்பவங்களை வெளியுலகிற்கு தெரியப்படுத்த வெரித்தாஸ் வானொலி தமிழ்ப்பணி முன்வந்துள்ளது. இச்சந்தர்ப்பத்தில் இம்மண்ணின் அவலங்களை, துயர நிகழ்வுகளை நீங்கள் கட்டுரைகளாக எழுதுவதன் மூலம் எமது மண்ணின் துயர் உலக நாடுகளுக்குத் தெரியப்படுத்துவதுடன் ஐ. நா. சபைக்கும், மற்றும் மனித உரிமை அமைப்புக்களுக்கும் எங்கள் நிதியைத் தெரியப்படுத்த இது ஓர் சந்தர்ப்பமாகும்.

உங்கள் ஆக்கங்களை அனுப்ப வேண்டிய முகவரி:-

| | |
|---|---|
| வெரித்தாஸ் | வெரித்தாஸ் |
| வாசகர் வட்டம், | வாசகர் வட்டம் |
| இல. 542, | விளம்பர இல. 2, |
| C/o உதயன் பணிமனை, | C/o உதயன் |
| சரசாலை, | கிளிநொச்சி கிளை நிலையம், |
| சாவகச்சேரி. | Y. M. C. A. கட்டடம், |
| | கிளிநொச்சி. |

(சி/4184)

---

வாடிக்கையாளர்கள் சகலருக்கும்
எமது இதயங்கனிந்த புத்தாண்டு வாழ்த்துக்கள்!

யாழ்ப்பாணம்

## வேளாங்கண்ணி வைத்தியசாலை

சகல நோய்களுக்கும் சிகிச்சையும்
(சுதேச மருத்துவ முறைப்படி)
கண்பரிசோதகரும், மூக்குக்கண்ணாடி வழங்குநரும்

DR. M. KARUNATHARAN,
A. M. P (SRILANKA)
(மஞ்சுளா பேக்கரி அருகில்)
திருநகர், கிளிநொச்சி.

(சி-4190)

---

வாடிக்கையாளர்கள் சகலருக்கும்
இதயம் நிறைந்த புத்தாண்டு வாழ்த்துக்கள்!

பாவியுங்கள்

## அண்ணா பற்பொடி

சகலவித பல் வியாதிகளையும் நீக்கி பற்களுக்கு வெண்மையையும், பலத்தையும் கொடுக்கிறது.

அண்ணா பற்பொடி
பாவித்த வெற்றுப் பக்கட்டுகள் 25 கொடுத்து ஓர் அப்பியாசக் கொப்பியை இனாமாக பெற்றுக் கொள்ளுங்கள்.

**அண்ணா தொழிலகம்**

பொன்நகர், கிளிநொச்சி.
கிளை: ... கிளிநொச்சி.

(சி-4192)

---

இதயம் கனிந்த புத்தாண்டு

★ வாழ்த்துக்கள் ★

நவீன முறையில் பழைய புதிய டிசைன்களில் குறித்த தவணையில் தைத்துப் பெற்றுக் கொள்ள நாட வேண்டிய இடம்:

## ஜெயாஸ்
## தையல் நிலையம்

சிவன் வடக்கு வீதி, பருத்தித்துறை.
(40431)

---

உ
ஓம் விராட் விஷ்வப் பிரம்மணே நம

உங்கள் இல்லங்களில் நடைபெறும்
**மங்கள வைபவங்களுக்கு**

தகரப் பந்தலில், அலங்கார வில்லுப்பந்தல், சொக்கட்டான் பந்தல் அமைத்து மணவறை, கதிரை, மாலை, மினுங்கல் சோடனை, ஒலி, ஒளி அமைப்புகள் யாவையும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள

மல்லாகம் காளிகோவிலடி

## T. N. பந்தல் சேவை யின்

தரமான சேவையைத் தற்பொழுது துவாரகன் வீதி (பங்களா வீதி - BANGALAW ROAD)

**மீசாலை மேற்கு**

(மீசாலை பழைய புகையிரத நிலையம் முன்பாக உள்ள கண்டி வீதியை டச் வீதியுடன் இணைக்கும் வீதி)

என்னும் முகவரியில் பெற்றுக்கொள்ளலாம்.
அனைவருக்கும் எமது புத்தாண்டு வாழ்த்துக்கள்

(41356)

---

அச்சுவேலி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்
(வரையுள்ளது)
( Regd No J. 1574 of 19- 02- 1972 )

### அங்கத்தவர்கள் கலந்துரையாடல்

மேற்படி சங்கத்தின் அங்கத்தவர்களுக்கு தொழில் வாய்ப்பளித்தல் மற்றும் சங்க தொழிற்பாடுகள் ஆரம்பித்தல் தொடர்பான கலந்துரையாடல் எதிர்வரும் **19- 4- 96** ஆம் திகதி காலை **11.00** மணிக்கு கிளிநொச்சி ப. தெ. வ. கூ. சங்கத்தில் கூ. அ. உ. ஆணையாளர் அவர்கள் தலைமையில் நடைபெறும். அங்கத்தவர்கள் யாவரையும் இக்கலந்துரையாடலில் கலந்துகொள்ளும் வண்ணம் கேட்டுக் கொள்கின்றேன்.

க. ஆறுமுகம்
தலைவர்

(41520)

---

## பொது அறிவு வகுப்புக்கள்

சமயபாட ஆசிரியர் தெரிவுப் போட்டிப் பரீட்சை, சுகாதார சமூக சேவை அமைச்சின் ஆட்சேர்ப்புப் போட்டிப்பரீட்சை, ஏனைய நியமனங்களுக்கான போட்டிப் பரீட்சைக்குத் தோற்றுவோருக்கான வகுப்புக்கள்.

**புதிய பிரிவுகள் ஆரம்பம்**

பிரிவு I காலை 9-30 மணி
பிரிவு II மாலை 4-30 மணி

காலம்: 14-04-1996 (ஞாயிற்றுக்கிழமை)
இடம்: வடமராட்சி, அல்வாய் வடக்கு
(சிறிலங்கா வித்தியாசாலை அருகில்)
ஆசிரியர்:- வே. தபேந்திரன் B. Com

குறிப்பு: அனுமதிகளை முற்கூட்டியே பதிவு செய்யவும்

★ இளங்கோ சனசமூக நிலையம் ★
அல்வாய் வடக்கு.
(40426)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## நம்பிக்கையுடன் முகம் கொடுப்போம்

சித்திரைப் புத்தாண்டு இன்று மலர்கிறது. இயற்கையின் பருவகாலச் சுற்று வட்டத்தில் வரும் காலக் காலத்தை மனிதனால் தடுக்க முடியாது. இயற்கையின் செயற்பாடு மனிதனின் மனநிலைக்கு ஏற்ப மாறுவதில்லை. மனித மனநிலை எத்தகையதாக இருந்தாலும் அவன் இயற்கை நிகழ்வை எதிர் கொண்டே ஆக வேண்டும்.

இயற்கை அன்னையின் மடியில், பல வர்ணப் பூக்கள் சேர்த்து இழைத்த மலர்க் கம்பளம் விரிக்கப்பட்டு, வசந்தத்தின் வண்ணம் மிளிரும் காலம் இது. மனதுக்கும் உடலுக்கும் இதம் தரும் இயற்கையின் இ[illegible]மை ததும்பும் இளவேனிற் காலம்.

வடதமிழீழத்தில் இருந்து, அதன் ஒரு பகுதியாகிய வலிகாமத்தில் இருந்து இடம் பெயர்ந்த மக்கள் மட்டுமன்றி, தமிழீழம் வாழ் தமிழர்கள் எவருமே புத்தாண்டு கொண்டாடும் மன நிலையில் இல்லை.

சிங்கள அரசுகளின் தொடர்ச்சியான கொடுமைப்படுத்தலினால், துன்புறுத்தலினால் உறவுகளையும் உடைமைகளையும் இழந்து, வாழ்க்கையின் ஓரத்தில் வந்து நிற்கிறார்கள் தமிழர்கள்.

மிகக் குறிப்பாக வலிகாமத்தையும், தீவகத்தையும் சேர்ந்த ஐந்தரை லட்சம் மக்கள் தங்கள் மண்ணையும், பல பரம்பரைகளாகத் தேடிய உடைமைகளையும் இழந்து உடுத்[illegible] உடையுடன் உயிர் ஒன்[illegible]யே உடம்பில் வைத்துக் கொண்டு ஏதிலிகளாக, நாடோடிகளாக ஒடித்திரிகிறார்கள்.

மனித வாழ்க்கைக்கு இன்றியமையாத ஆகக் குறைந்த அடிப்படைத் தேவைகளான உணவு, உடை, உறையுள் இன்றி, சுகாதார, மருந்து, வசதிகள் இன்றி ஆதிகால வாழ்க்கை நிலைக்கு ஒத்த சீவியம் நடத்த நிர்ப்பந்திக்கப் பட்டுள்ளார்கள்.

தங்கள் சொந்த இடத்துக்கு மீண்டு செல்ல முடியாதா, அங்கு ஒரு குடிசையை அமைத்தோ கொட்டிலைக் கட்டியோ வாழ்க்கையை அடி அத்திவாரத்தில் இருந்தாவது ஆரம்பிக்க வாய்ப்பு வருமா என்ற மன ஏக்கத்துடனேயே லட்சக் கணக்கான மக்கள் தமது நாள்களைக் கழித்து வருகிறார்கள்.

உடலையும் உயிரையும் பிடித்துக் கொண்டு ஓடி வந்து விட்டோம்; இனியும் இப்படி எந்தனை நாளுக்கு எங்கெங்கு எல்லாம் ஓடப்போகிறோம் என்ற விரக்தியின் விளிப்பில் நிற்போர் பலர்.

இந்தச் சலிப்பும், மன அலுப்பும் பயன் தருமா?

சுதந்திரம் சும்மா வராது, இரத்தம் சிந்தி, வியர்வை சிந்தி, கஷ்டப்பட்டு, கடினமாக உழைத்தால் தான் அது கிடை[illegible]தும்

ஆகையால் இப்போதைய நிலையில் இருந்து மீண்டு நிமிர்ந்து எமது வாழ்க்கையை உறுதிப் படுத்திக் கொள்ள வேண்டியவர்கள் நாமே. நாமன்றி வேறு எவரும் எங்களுக்காக அந்தப் பணியைச் செய்யமாட்டார்கள். அதற்காக மன உறுதி குலையாமல் உழைக்க வேண்டியவர்களும் நாமே.

நம்பிக்கை தான் மனித வாழ்வைத் தொடர வைப்பது. எந்த இடரின் போதும் அதனை இழந்துவிடக்கூடாது நாம். இழந்தவற்றை மீட்டெடுக்க வேண்டும் என்ற உறுதியுடன், இன்று மலரும் புதிய ஆண்டுக்கு நம்பிக்கையுடன் முகம் கொடுப்போமாக.

# அரசு-விடுதலைப் புலிகள் பேச்சு நடத்த வேண்டும்

## கத்தோலிக்க தேசிய கமிசன் கோரிக்கை

கொழும்பு, ஏப். 13

''அரசாங்கமும், விடுதலைப் புலிகளும் தற்போதைய வன்செயல்கள் மற்றும் போர்ப் பாதையை விடுத்து மனப்பூர்வமான பேச்சுவார்த்தையை நடத்த வேண்டும்''

நீதி, சமாதானம் மற்றும் மனித அபிவிருத்திக்கான கத்தோலிக்க தேசிய கமிஷனின் தலைவர் ஆயர் மல்கம் ரஞ்சித், செயலாளர் வணபிதா ஜே. பி. தேவராஜா ஆகியோர் விடுத்துள்ள அறிக்கையில் மேற்கண்டவாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

துப்பாக்கியால் மோதல்களை தீர்க்க முடியாது. வெறுப்பை வெறுப்பினால் அல்ல அன்பினாலேயே வெல்ல முடியும்.

எல்லா முரண்பாடுகளும் இறுதியில் பேச்சுவார்த்தை, இணக்கப்பாடு, பரஸ்பர நம்பிக்கை, ஒற்றுமை ஆகியவற்றிலேயே முடிவடைய வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-3)

## மலரும் புத்தாண்டும் புது நம்பிக்கை தருவதாக

### இந்து சமயப்பேரவை செய்தி

சாவகச்சேரி, ஏப். 13

''மலரும் புத்தாண்டு எம் அனைவருக்கும் புது நம்பிக்கையையும் புத்துணர்வையும் தருவதாக.''

யாழ்ப்பாணம் இந்து சமயப் பேரவை, புத்தாண்டு தினத்தை முன்னிட்டு விடுத்த செய்தியில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

ராணுவ நடவடிக்கைகள் காரணமாக தமது சொந்த இருப்பிடங்களையும், சொத்துக்களையும் இழந்து பல்வேறு இன்னல்களுக்கு மத்தியில் தற்காலிக குடிசைகளிலும் நலனோம்பு நிலையங்களிலும் வாழ்ந்து கொண்டிருக்கும் ஈழத் தமிழ் மக்களின் துயரங்கள் யாவும் மலரும் புத்தாண்டில் நீங்கி, எம்மக்கள் சமாதானத்துடனும், சுபீட்சத்துடனும், சுதந்திரத்துடனும் வாழ வழி வகுக்க வேண்டுமென எல்லாம் வல்ல எம்பிரானை இந்நன்நாளில் பிரார்த்திக்கிறோம் என்று அந்த செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது (இ)

## முன்னாள் அமைச்சர்கள் ஐவர் மீது லஞ்ச விசாரணை

ஐக்கிய தேசிய கட்சியின் ஆட்சிக் காலத்தில் அமைச்சர்களாகப் பணி புரிந்த மூவர் மற்றும் பிரதி அமைச்சர்களாகப் பணி புரிந்த இருவர் தொடர்பாக லஞ்ச, ஊழல் செயல்களுக்கு எதிரான நிரந்தர ஆணைக்குழு விசாரணைகளை ஆரம்பித்திருக்கின்றது.

இந்த ஆணைக்குழுவின் பணிப்புரையின் பேரில் முன்னாள் இராணுவத் தளபதியும், பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளருமான ஜெனரல் ஹமில்டன் வனசிங்க மீது கொழும்பு மேல் நீதிமன்றத்தில் லஞ்ச, ஊழல் வழக்கு ஒன்றை ஆணைக்குழுவின் செயலாளர் நாயகம் திருமதி நெலும் கமகே தாக்கல் செய்திருப்பது தெரிந்ததே.

தற்போது லஞ்ச, ஊழல் விசாரணைகளை எதிர்நோக்கியிருக்கும் ஐந்து அரசியல்வாதிகளில் நால்வர் தற்போது எம். பிக்களாக உள்ளனர்- (உ)

## வேலை நிறுத்த அறிவித்தல் தொண்டாவை அழைத்து சந்திரிகா பேசினார்

கொழும்பு, ஏப். 13

எதிர்வரும் 22 ஆம் திகதி முதல் ஒருவார காலத்துக்கு வேலை நிறுத்தப் போராட்டம் ஒன்றை நடத்தப் போவதாக இ. தொ. கா அறிவித்ததையடுத்து, பெருந்தோட்டத் துறையில் உருவாகியிருக்கும் நெருக்கடி நிலை குறித்து ஆராய்வதற்காக, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இ. தொ. கா தலைவரும், அமைச்சருமான எஸ். தொண்டமானை வியாழக்கிழமை காலை அலரிமாளிகைக்கு அழைத்து பேச்சுவார்த்தை நடத்தினார்.

பல கோரிக்கைகளை முன்வைத்து இ. தொ கா. நடத்தும் இந்த ஒரு வார கால அடையாள வேலை நிறுத்தத்துக்கு வேறு பல தொழிற்சங்கங்களும் ஆதரவு தெரிவித்திருப்பது தெரிந்ததே (இ-3)

## மாகாணசபை உறுப்பினர் காயம்

கொழும்பு, ஏப். 13

மின்சாரம் தடைப்பட்டு வீடு இருளில் மூழ்கியபோது, தனது தலையணைக்கு கீழ் வைக்கப்பட்டிருந்த துப்பாக்கியை எடுக்க முயன்ற தென மாகாணசபை உறுப்பினர், தற்செயலாக துப்பாக்கி வெடித்ததால் காயமடைந்தார்.

பண்டாரி கொடை என்ற மாகாணசபை உறுப்பினரே காயமடைந்தவராவார். (இ-3)

## போலி டாக்டர்

கொழும்பு, ஏப். 10

கடந்த 4 மாதங்களாக கொழும்பு பெரியாஸ்பத்திரியில் டாக்டராகப் பணியாற்றி வந்த பெண் ஒருவர் கடந்த ஞாயிற்றுக்கிழமை ரகசியப் பொலீஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார் என 'லங்காதீப' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இவர் உண்மையில் டாக்டர் அல்ல என்றும், டாக்டராக நடித்து வந்தார் என்றும் பொலீஸார் தெரிவித்தனர். (இ-3-6)

## சந்திரிகா இம்மாதம் சீனா, ஜப்பான் விஜயம்

உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு அடுத்த வாரம் சீனாவுக்கு விஜயம் செய்யவிருக்கும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க —

அதற்கு முன்னர் தமது அமைச்சரவை சகாக்களை அழைத்து உள்ளூராட்சித் தேர்தல்களை நடத்துவது குறித்து ஆலோசனை செய்து முடிவு எடுப்பார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இம்மாதம் இறுதியில் சீனாவிலிருந்து நாடு திரும்பும் ஜனாதிபதி அடுத்த மாத முற்பகுதியில் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு ஜப்பான் செல்லவிருக்கின்றார். (இ)

## புதுவருடக் கருமம்

தாது புதுவருடம் இன்று மலர்கிறது.

வாக்கிய பஞ்சாங்கப்படி பி. ப. 2 மணி 25 நிமிடத்திலும், திருக்கணித பஞ்சாங்கப்படி மாலை 4 மணி 51 நிடடத்திற்கும் புதிய வருடம் பிறக்கிறது.

வாக்கிய பஞ்சாங்கப்படி, முற்பகல் 10.25 மணி முதல் மாலை 6.25 மணி வரையும் விஷு புண்ணிய காலம். திருக்கணித பஞ்சாங்கப்படி, நண்பகல் 12.51 மணி முதல் இரவு 8.51 மணி வரை மேட சங்கிரமண காலமாகும். இக்காலத்தில் மருத்துநீர் வைத்து நீராடி, புத்தாடை தரிக்கவேண்டும்.

இன்று இரவு 6.21 மணி முதல் 8.13 மணி வரையும், இரவு 8.25 மணி முதல் 9.01 வரையும் வாக்கிய பஞ்சாங்கப்படி கைவிசேடத்துக்குரிய சுபநேரங்களாகும்.

திருக்கணித பஞ்சாங்கப்படி இன்று இரவு 8.28 மணி முதல் 10.04 மணி வரையும், இரவு 10.28 மணி முதல் 11.40 மணி வரையும் கைவிஷேடம் வழங்கலாம்.

## திருப்பத்தைத் தந்திடு

ஏதும் இன்றி இருப்பிடம் நீத்து
எவரோ வீட்டில் புகலிடம் தேடி
யாதும் ஊராய் யாவரும் கேளிராய்
நலிந்தும் மெலிந்தும் வாழும் மக்கள்
போதும் இந்நிலை என்று புழுங்கியே
புதிய வாழ்க்கையை நாடித் தவிக்கிறார்
தாது வருடமே தரணியில் பிறக்கிறாய்
தக்க திருப்பத்தைத் தந்திடு விரைவில்.

— வாசுகி சிவராமலிங்கம்

## சொந்த மண் சென்ற பின்பு...

பத்தாண்டின் மேலான அவலங்கள் ஓயவில்லை
புத்தரிசி கொண்டு பொங்கிட இயலவில்லை
புத்தாடை புனைந்திடப் போதிய பணமில்லை
புத்தாண்டு வந்ததென்று புத்துணர்வு எங்குமில்லை

பொங்கிடலாம் பொங்கல்
புத்தாண்டு பிறந்ததென்று
பங்கிடலாம் உறவினர்க்கும்
பாசம் மிகுந்தவர்க்கும்
தங்கிடலாம் வீட்டிலென்று
தாராளமாய் அழைப்போம்
பொங்கிடலாம் பூரிப்பில்
சொந்தமண் சென்ற பின்பு!

உரும்பிராய்
கு. சி. சுந்தரம்பிள்ளை

## வல்லமை சேர்த்திடம்மா

சித்திரை நங்கையே,
இத்தரை எங்குமே,
சொல்லிட கொஞ்சமல்ல,
மெல்ல,,, மெல்ல,,,
பார்த்து வா.
உன் விழிகள்
உடைப்பெடுக்கிறதோ
வலிகாம கோலங் கண்டு,
நீ விம்மியது போதும்,
நிறைந்து நிற்கும்
வீதிகளில்
நிலையிழந்து
விழுந்திடாதே,
நாமே தேறி விட்டோம்,
நம் உறுதி கண்டு
அகிலமே திகைத்து
நிற்கிறது.
உனக்கேன் சஞ்சலம்.

இனியென்னவோ,,,,,
நாம் கொடுத்ததை
எடுக்க வேண்டுமல்லவா.
அழுகையைத் துடைத்து,
ஆசீர்வதியம்மா,
நீ நடந்து வருகின்ற,
எம் தரைகளிலெல்லாம்,
நம் நிம்மதி மூச்சு பரவி,
களையிழந்த
இடங்களிலெல்லாம்,
சோபை பிறக்க
வேண்டுமம்மா,
தாது நங்கையே,
உன் தாள் பிடித்து
நிற்கிறோம்:
எங்கள் கரங்களுக்கு,
வல்லமையைச்
சேர்த்திடம்மா.

மீசாலையூர்
கமலா

## துயர் போக்க வருக

சித் திரைப் பெண்ணே வா - உனை
முத் தமிட்டு ஏற்போம்.
அத் தைமகள் வந்தும் - இல்லை
மெத் தசுகம் வாழ்வில்.
யுத் தம்அது ஓய்ந்து - எந்தமிழ்
முத் தம்மீள வேண்டும்.
புத் தம்புது ஈழம் - எமக்கு
நித் தம் இனி வேண்டும்.
சத் தம் அடி கேட்டு - நிதம்
சித் தம்கலங்கி யாச்சு.
ரத் தம்சிந்தும் தமிழருக்கு - நாளை
மொத் தமாய் விடியல் தாராய்.

— உடுவில்
வி. ப. சசிவர்ணன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமலை துறைமுகத்தை தாக்குவதற்கும் திட்டம்

## பாதுகாப்பு வட்டாரங்கள் தகவல்

கொழும்பு, ஏப். 13

திருகோணமலை துறைமுகத்தைத் தாக்குவதற்காக விசேட பயிற்சி பெற்ற கரும்புலிகளையும், கடற்புலிகளையும் கொண்ட 200 பேர் அடங்கிய குழு ஒன்று அங்கு அனுப்பப்பட்டுள்ளதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்ததாக 'திவயின' செய்தி வெளியிட்டுள்ளது.

மூதூர்,கட்டைப் பறிச்சான் பகுதிகளில் இவர்கள் நடமாடுவதாகவும் — துறைமுகப்பகுதி பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாகவும் — மேலும் தெரிவிக்கப்பட்டது. (இ-3-6)

## மின்னலால் இருவர் தாக்குண்டனர்

சாவகச்சேரி, ஏப். 13

மின்னலால் தாக்குண்ட இருவர் மயக்கமடைந்த நிலையில் நேற்று பிற்பகல் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

எழுதுமட்டுவாள் தெற்கு, பெரியகேணியடிப் பிள்ளையார் கோவில் அருகில் இச்சம்பவம் இடம்பெற்றது.

செந்தில்நாதக்குருக்கள் சங்கரம்மா (வயது 66), கணபதிப்பிள்ளை கிருபானந்தமூர்த்தி (வயது 38) ஆகியோரே மின்னலினால் தாக்குண்டவர்கள் ஆவர். (இ-13)

## ஜெயலலிதாவின்கூட்டத்தில் செருப்பு வீச்சு! கல் வீச்சு!!

### பொலீஸ் தாக்குதலில் ஒருவர் பலி

தமிழக முதல்வர் ஜெயலலிதா மதுரையில் நேற்றுக் கலந்துகொண்ட தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் செருப்பு வீச்சும், கல் வீச்சும் இடம் பெற்றன.

காவல் துறையினர் தடியடி நடத்தியதில் ஒருவர் கொல்லப்பட்டார் பலர் காயமடைந்தனர்.

கடந்த 5 வருட காலத்தில் ஜெயலலிதா கலந்து கொண்ட கூட்டத்தில் இப்படியான சம்பவம் முதல் தடவையாக நடைபெற்றிருப்பதாக வெரித்தாஸ் வானொலி தெரிவித்தது. (இ-8)

## மூப்பனார் கட்சியில் இணைவு

புதுச்சேரியில் இளைஞர் காங்கிரஸ் தலைவர் வி. பாலன் தமிழ் மாநில காங்கிரஸ் மூப்பனார் பிரிவில் சேர்ந்துள்ளார். சட்டப் பேரவைக்கு போட்டியிட காங்கிரஸ் ஐ சார்பில் வாய்ப்பளிக்கப்படாத காரணத்தாலே பாலன் கட்சி மாறினார் என்று தெரிவிக்கப்பட்டது.

## கொழும்பு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மும் தாக்குதல் நடத்தப்பட்டது.

இத்தாக்குதலினால் துறைமுகத்தில் தரித்து நின்ற வர்த்தகக் கப்பல்கள் சிலவும் கடற்படையின் டோறா படகு உட்பட சில படகுகளும் சேதமுற்றன.

தாக்குதல் நடத்திய படகுகள் மீது கடற்படையினர் எதிர்த் தாக்குதல் நடத்தியதை அடுத்து அவை வெடித்துச் சிதறியதாக ஸ்ரீ லங்கா அரசு தெரிவித்தது.

தாக்குதல் நடத்திய படகுகளில் ஒன்று துறைமுகத்துக்குள் வைத்து அழிக்கப்பட்டதாகவும் —

மற்றைய படகு தாக்குதல் நடத்தி விட்டு தப்பிச் செல்லுகையில் துறைமுகத்துக்கு வெளியே ஒரு மைல் தொலைவில் வைத்து கடற்படையினரால் அழிக்கப்பட்டதாகவும் —

அரசுத் தரப்பில் மேலும் கூறப்பட்டது.

இதன் பின்னர் கொழும்புத் துறைமுகத்துக்குள் கடல் நீருக்குள் நடமாடிய — நீரடித் தாக்குதல் நபர்கள் — சிலரை 'சோனர்' சமிக்ஞை கருவிகள் மூலம் கடற்படையினர் கண்டு பிடித்து அவர்கள் மீதும் தாக்குதல் நடத்தினர் என்றும்—

இத்தாக்குதல்களை அடுத்து அந்நபர்கள் வெடித்துச் சிதறினர் என்றும்—

இவர்கள் தற்கொலைத் தாக்குதல் நபர்கள் என்றும்—

ஸ்ரீலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

இத்தாக்குதலை கடற்புலிகலே நடத்தினர் என்றும் ஸ்ரீலங்கா அரசு குற்றம் சுமத்தியிருக்கின்றது. (உ-இ-3-6-7-8)

# வெள்ளாடை அணிந்து அரச எதிர்ப்புப் பேரணி

சாவகச்சேரி, ஏப். 13

வடபகுதிக் கடற்றொழிலாளர்களின் அவலங்களை வெளி உலகுக்கு தெரியப்படுத்தவும்—

ஸ்ரீலங்கா அரசு வடபகுதி மீது மீண்டும் பாரிய ராணுவ நடவடிக்கை ஒன்றை மேற்கொள்ளாது, தடுக்க சர்வதேச சமூகம் அரசுக்கு அழுத்தம் கொடுக்கவேண்டும் என்று கோரியும் — வெள்ளாடை அணிந்து அரச எதிர்ப்புப் போராட்டம் ஒன்று நடத்தப்பட உள்ளது.

யாழ். மாவட்ட வெகுஜன அமைப்புக்களின் ஏற்பாட்டில் வடமாகாண கடற்றொழிலாளர்கள், கூட்டுறவுச் சங்கங்களின் சமாஜம், வடமராட்சி கடற் தொழிலாளர் கூட்டுறவு சங்கங்களின் சமாஜம், வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் ஒன்றியம், வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் ஒன்றியம் ஆகியவை நேற்று மாலை நெல்லியடியில் நடத்திய கூட்டத்தில் இது தொடர்பான தீர்மானம் எடுக்கப்பட்டது.

இது தொடர்பாக மகஜர் ஒன்றைத் தாயரித்து ஐ. நா பொதுச் சபை செயலாளர் நாயகத்துக்கு அனுப்புவது என்றும் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. (இ)

## வேலை நிறுத்தத்துக்கு ஐ. தே. கட்சி ஆதரவு

கொழும்பு, ஏப்.13

தோட்டத் தொழிலாளரின் சம்பள உயர்வு மற்றும் இருப்பிட வசதிகள் உட்பட பல கோரிக்கைகளை முன்வைத்து இ. தொ. காவின் ஏற்பாட்டில் எதிர்வரும் 22 ஆம் திகதி முதல் ஒருவாரம் நடைபெறவுள்ள அடையாள வேலை நிறுத்தத்துக்கு ஐ. தே. க. ஆதரவு தொழிற்சங்கங்கள் பூரண ஆதரவை வழங்க முன்வந்துள்ளன.

ஐ. தே. கவின் கட்டுப்பாழிடில் தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கம் என்ற தொழிற்சங்கம் செயற்பட்டு வருகிறது. [இ-3]

## அரசின் யோசனை மூலம் தீர்வு ஏற்பட்டு விடமாட்டாது

### தென் மாகாண ஆளுநர் கூறுகிறார்

கொழும்பு, ஏப். 13

''அரசின் தீர்வுத் திட்டத்தின் மூலம் இனப்பிரச்சினையை தீர்க்கலாம் என நான் கருதவில்லை. அரசும், விடுதலைப்புலிகளும் பேச்சு நடத்துவதன் மூலமே இதனைத் தீர்த்து வைக்க முடியும்''

— இப்படிக் கூறியுள்ளார் தென் மாகாண ஆளுநர் நெவில் கனகரத்தின.

கண்டியில் நடந்த 'இனங்களுக்கிடையிலான நல்லுறவு' என்ற தலைப்பிலான கருத்தரங்கில் பேசுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

முன்னாள் அமைச்சர் ஷெல்டன் ரணராஜா தலைமையில் நடந்த இக் கருத்தரங்கில் பேசுகையில் ஆளுநர் மேலும் கூறியதாவது:-

'இராணுவ தீர்வல்ல பேச்சு மூவமே தீர்வு காணப்பட வேண்டும்' — என்று ஜனாதிபதியும் வெளிநாட்டுப் பத்திரிகைகளுக்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார். பேசித்தீர்க்கவே அவர் விரும்புகிறார். ஆனால் பிரபாகரன் பேச்சுக்கு வருகின்றார் இல்லை என அவர் கூறுகின்றார்.

எல்லாவற்றுக்கும் முன் சந்தேகங்கள் தீர்க்கப்பட வேண்டும். ஒருவரை ஒருவர் சந்தேகத்துடன் பார்க்கக் கூடாது. இந்த சந்தேகமற்ற உணர்வினை ஏற்படுத்த வேண்டும் — என்றார்.

## கிளிநொச்சியில் கூட்டுறவுக் கல்லூரி

கிளிநொச்சி, ஏப். 13

கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவுச்சபை, கூட்டுறவுக் கல்லூரி ஒன்றினை இப்பகுதியில் ஆரம்பிப்பதற்கான முயற்சிகளில் ஈடுபட்டு வருகிறது. பிரஸ்தாப சபையின் தலைவர் திரு. தி.இராசநாயகம் இத்தகவலை உதயனுக்குத் தெரிவித்தார்.

கூட்டுறவுக் கல்லூரி ஆரம்பிப்பதற்கான கட்டடம்ஒன்று கிளிநொச்சி பகுதியில் அமைக்கப்பட்டு வருகிறது. இக் கல்லூரிக்கான அலுவலகம் மற்றும் வகுப்பறைகள் யாவும் பூர்த்தியாக்கப்பட்டுள்ளன.

விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ள இக் கூட்டுறவுக்கல்லூரியில்கூட்டுறவுத்துறை சம்பந்ரமான சாதாரன, உயர்தத வகுப்புக்களுக்கானபோதனைகள் வழங்கப்படும் — என்றும் அவர் தகவல் தந்தார். (அ-124)

## கிளிநொச்சியில் பொருள்கள் விநியோகம்

இடம்பெயர்ந்த மக்களுக்கு வழங்குவதற்கென ஒரு தொகுதி பாவனைப் பொருட்களை கெயர் ஸ்தாபனம் அண்மையில் கொழும்பிலிருந்து எடுத்து வந்துள்ளது.

இப்பொருள்கள் தற்பொழுது இடம்பெயர்ந்த மக்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன. மடிக்கும் தண்ணீர்க் கொள்கலன்கள் பிளாஸ்ரிக் வாளிகள், உடுபுடைவைகள், படுக்கை விரிப்புக்கள் ஆகியனவும் இப்பொருள்களில் அடங்கும். [அ-124]


## தர்மிசா ரவல்'ஸ்

அம்புலன்ஸ் தொடர் சேவை

கொழும்பிற்கு சிகிச்சைக்காக செல்லும் நோயாளர்களினதும், வயோதிபர்களினதும் பதிவுகள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.

அடையாள அட்டை இல்லாதவர்களது பதிவுகளும், 60 வயதிற்குட்பட்டவர்களது பதிவுகளும் பரிசீலிக்கப்படுகின்றன.

மீன்சந்தை வீதி,
சாவகச்சேரி.

(41367)



## புது வருட வாழ்த்துக்கள்

மாட்டிறைச்சிக் கடை
கைதடி

வாடிக்கையாளருக்கும், ஓடர் இறைச்சி பெறுபவர்களுக்கும், நண்பர்களுக்கும், எனது தொழிலாளருக்கும் எனது இதயம் நிறைந்த புது வருட நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

விற்பனைத்தினம்:- சனி, ஞாயிறு, திங்கள், செவ்வாய்,புதன். வியாழன்

எஸ். எஸ். சோமசுந்தரம்
(உரிமையாளர்)

மாடுகள் விற்பனைக்கிருந்தால் கீழ்க்காணும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். உடன் ரொக்கம் தரப்படும்.

எஸ். எஸ். சோமு
வைரவர் கோவிலடி,
கைதடி- நுணாவில்.

(41506)


2 ஆம் பக்கத்தில் மரண அறிவித்தல்கள்


அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எமது இதயம் கனிந்த

★ புத்தாண்டு வாழ்த்துக்கள் ★

அன்றும் இன்றும் அசல் 22 கரட் தங்க நகைகளை குறித்த தவணையில் செய்து கொடுப்பவர்கள்

## சிவா நகை மாடம் (யாழ். அருள் முருகன் நகை அகம்)

கண்டி வீதி,
சாவகச்சேரி.

★ பழைய நகைகள் நல்ல விலையில் கொள்முதல் செய்யப்படும். ★

(41382)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினரால், சாவகச்சேரி, சரசாலை தெற்கில் உள்ள அவர்களது தற்காலிகப் பணிமனையில் 13 - 04 - 96 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org